வடிவுடைக் காந்திமதியே...

நெல்லை கண்ணன்

வடிவுடைக் காந்திமதியே...

நெல்லை கண்ணன்

வேலுக்கண்ணன் பதிப்பகம்
69, அம்மன் சன்னதி தெரு,
திருநெல்வேலி நகரம் - 627 006

நன்றி
பெரும்புலவர் **திரு. மி.சே. கிரகோரி** அவர்கட்கு
திரு. மா. சந்திரசேகர், வாழப்பாடி

வடிவுடைக் காந்திமதியே... > நெல்லைக் கண்ணன் >
தமிழ்க் கவிதைத் தொகுப்பு

முதற்பதிப்பு : மார்ச் 2003 > இரண்டாம் பதிப்பு : ஏப்ரல் 2006 >
மூன்றாம் பதிப்பு : செப். 2011 > நான்காம் பதிப்பு : ஜூலை. 2020

வேலுக்கண்ணன் பதிப்பகம் > 69, அம்மன் சன்னதி தெரு,
திருநெல்வேலி நகரம் - 627 006.
பேச : 0462 2337734

வடிவமைப்பு : எழுத்துக் கலையகம், திருநெல்வேலி நகரம்.
பேச : 94434 84300

விலை : **100/-**





அணிந்துரை



தமிழாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞர் நெல்லைக் கண்ணன் என் இனிய இளவல்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்த இனிய தம்பியை நான் அறிவேன்

வியர்க்க வைத்து வியப்பில் ஆழ்த்தும் அவரது வேகமான வளர்ச்சியை பக்கத்திலிருந்து பார்த்து பரவசப்படுபவன் நான்

'வாழ்க தமிழுடன்' இது இவர் வாழ்வின் குறிக்கோள்

சொல்லுஞ் சொல்லடுக்கிச் சுவை கூட்டி சுருதி மீட்டிப் பல்லுடைக்கும் வார்த்தைகளைப் பழகு தமிழ் மொழியாக்கிப் பேசும் திறம் தமிழன்னை அவருக்கு தந்த வரம்

கல்லூரி வளாகத்தில் அவர் கால் பதிக்கவில்லை உண்மை தான். ஆனால் முனைவர் பட்டம் பெற்றவர் மூக்கின் மேல் விரல் வைத்துப் பாராட்டும் அளவுக்கு இலக்கிய இமயத்தின் முகட்டை எட்டிப் பிடித்தவர்

ஒருவன் படித்தவனா என்று இனம் காணப் பாரதி இரு அடையாளங்களை சுட்டுவான். கல்வி அறிவால் உலகியலைத் துல்லியமாகக் கண்டறியும் கண்ஒளி படைத்தவர்களைத் தாம் ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா! என்று பாரதி விளித்தான்.

"எளிமை கண்டு இரங்குவாய் வா! வா! வா!"

சிறுமைகண்டு பொங்குவாய் வா! வா! வா!"

என்று பாடும் போதுதான் கல்விக்கண் பெற்றவர்க்காண இரு அடையாளங்களைப் பாரதி காட்டுகிறான்.

எளியவரைக் கண்டால் இரங்குவதும், சமூகத்தைச் சீரழிக்கும் சிறுமையினைக் கண்டால் சீறி எழுந்து பொங்குவதும் படித்தவனுக்கான இரு அடையாளங்களை யுந்தாம் தம்பி நெல்லைக் கண்ணனில் காண்கிறேன்.

பழுத்த இலக்கியவாதியாக மட்டுமல்லாமல் பண்பட்டுக் கனிந்த இதயம் கொண்டவராக வும் அவரை நான் பார்க்கிறேன்.

"வடிவுடைக் காந்திமதியே"என்ற அவரது கவிதை புதையலில் அவரது விரிந்த இதயம் வெளிச்சம் காட்டுகிறது.

"மலர் கொண்ட கூந்தலைத் தென்றல் தா லாட்டிடும்
மதுரை மீனாட்சி உமையே"

என்ற கவியரசு கண்ணதாசனின் சந்தம் தம்பி நெல்லைக் கண்ணனைப் பற்றிக்கொள்ள

"உலகங்கள் ஆளுமொரு
வேணுவன நாதரவர்
உளமார்ந்த காந்திமதியே!
உந்தனிரு பத மலரில்
வைக்கின்றேன் மனித குலம்
உயர்திடவோர் வழியைக் காட்டு"

என்று வடிவுடைக் காந்திமதியின் வண்ணச்சீரடி பரவி இந்தக் கவிதைப் பேழையைத் திறக்கிறார், அவர்.

"எந்தன் பாட்டுத் திறந்தாலே வையத்தைப்
பாலித்திட வேண்டும்"

என்ற பாரதியின் பக்குவம் தொடக்கத்திலேயே துளிர்விடுகிறது.

'நெல் சேர உழுதுழுது பயன் விளைவிக்கும் உழவர்களின் நிறை உழைப்புத் தோள்கள் எல்லாம் வறுமையால் வாடிச் சூம்பிப் போக, அவர்கள் ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டவர்கள், சுகத்தின் மேல் சுகங்களை அனுபவிக்க அனுமதி அளிப்பது நியாயந்தானா?' என்று தம் நான்காவது கவிதையில் காந்திமதியை நோக்கிக் கணைதொடுக்கும் நெல்லை கண்ணன்,

“பழமதை மூத்தோனுக்
களித்தங்கு இளையோனின்
பழிகொண்ட காந்திமதியே”

என்று அந்தக் கவிதையை முடிக்கிறார்.

‘உலகெலாம் சுற்றி வந்த முருகவேளை உதாசீனம் செய்துவிட்டுத் தங்களை மட்டுமே வலம் வந்த கணபதிக்குக் கனி தந்து பழி கொண்டவள்தானே’. அதனால்தான் பழுதான சமுதாய அமைப்புகளைப் பார்த்தும் மௌனம் சாதிக்கிறாயா? என்ற வினாவில் நக்கீரன் முகம் காட்டும நயம் வெளிப் படுகிறது.

நிகழ்காலத்தைக் கைகளில் எடுத்துத் தங்கள் பைகளை நிரப்பிக் கொண்டு, ‘இளைஞர்களே! எதிர்காலம் உங்கள் கையில்’என்று ஏமாற்றி, அவர்களைக் கொடி பிடிக்க வைக்கும் நாலாந்தர அரசியல்வாதிகளையும், ஒரு சிலருக்கு லாபம் தரும் காரணத்தால் அவர்கள் எண்ணத்தில் பிறந்து, இதயத்தில் தவழ்ந்து, சட்டத்தில் நின்று, சம்பிரதாயத்தில் நடமாடும் சாதி மதங்களின் பெயரால் பூசல்களை உருவாக்கிப் புரளி செய்யும் சநாதனப் புரட்டர்களையும் அன்னை காந்திமதிக்கு அடையாளம் காட்டி, இந்தக்

“கள்ளத் தனத்துடை
மொத்த உருவங்கள்
கண்டுமேன் மௌனம் தாயே?”

என்று மௌனத்தைக் கலைத்து, கந்தவேள் கையில் கொடுத்த சக்தி வேலாயுதத்தை அந்தச் சழக்கர் மேல் திருப்பு என்று அவளுக்கு நினைவூட்டுவது போல்,

“கந்தவேள் தனக்கொரு
சக்திவேல் தந்திட்ட
கருணைமிகு காந்திமதியே!”

என்று அந்தக் கவிதையை முடிக்கின்றார்.



இன்னொரு கவிதை. அன்னை காந்திமதி புன்னகை செய்கிறாள். அந்தப் புன்னகை ஒளியில் ஒரு கோடிச் சூரியனை ஒன்று திரட்டிய ஒளியும் மங்கிப் போகிறதாம்.

"சிரித்தே முப்புரத்தை எரித்த சிவனாரின் துணைவி தானே, நீ. இங்கே பார், புசித்தது செரித்திட மருந்தினைத் தேடும் புல்லர்கள் ஒரு புறம். புற்றிலே எறும்புகள் சேமிக்கும் அரிசிக்குப் போட்டியிடுவோர் மறுபுறம். வசித்திடக் குடிசையின்றி வதைபடுவோர் பலர் இருக்க, அரண்மனை வீட்டு அந்தப்புரத்தில் ஆனந்தக் களிப்பால் ஆடுவார் இன்னொரு புறம்". இந்த ஏற்றத் தாழ்வுகளை எரித்துவிடும் சிந்தனை உனக்கு இல்லையா?

"ஒரு கோடிச் சூரியர்தம்
ஒளியாவும் ஈடுசொல
வழியின்றிச் செய்துவிடும்
ஒண்ணகையின் காந்திமதியே"

என்று கேட்கிறார்.

'தமிழில் வழிபாடா? இறைவனுக்கா? அது தகுமோ?' என்று தமிழ் வழிபாட்டிற்குக் குறுக்குச்சுவர் போடும் கோணல் மதியினருக்கும் பதிலடி தருவது போல்,

"சரிபாதி தான்தந்த
இறையோனின் முழுமனதில்
தமிழான காந்திமதியே"

என்று பாடுகிறார்.

உடலில் சரிபாதியைத் தான் இறைவன் அம்மைக்குத் தந்தான். ஆனால், அன்னையோ தமிழே வடிவாகித் தலைவனின் மனத்தை முழுமையாய் ஆக்கிரமித்துக் கொண்டாள் என்று கவிஞர் பாடும்போது "வாழ்க தமிழுடன்" என்ற தன் கொள்கைக்கு வலிமை சேர்க்கிறார்.



திருமணப் பிரதேசத்தில் கன்னித் தீவுகளாய்க் காலம் கழிக்கும் பெண்ணினத்திற்கு வாழ்வு தராமல் வரதட்சணைக்காய் வாய் பிளந்தலையும் வாலிபரை நோக்கி,

“கறவாத பசுக்களுக்
குதவாத காளைகள்
காளைக ளாகியென்ன”

என்றும், திருமணமே செய்யாமல் செயற்கை முறையில் கருத்தரிக்கும் பெண்குலத்தைப் பார்த்து,

“காளைகள் இன்றியே
கன்றுகள் ஈன்றிடும்
கலப்பினப் பசுக்களென்ன”

என்றும் சாடிவிட்டு, அந்தக் கவிதையை

“திருவோடு வாழ்ந்தும் ஒரு
திருவோடு ஏந்தியே
தெருவோடு வந்த சிவனைத்
திருநெல்லைப் பதியிலே
தவம் கொண்டு மணம் கொண்ட
தென்பொருநைக் காந்திமதியே”

என்று முடிக்கும் போது மணம் செய்யத் தடையாகப் பணம் நிற்கக்கூடாது, மனம் ஒன்றுவதே மணம் என நயமாகச் சுட்டுகிறார்.

“அள்ளிப் பால் தந்து குழந்தையைப் பேணிடும் ஆசையை வறுமை கொல்ல, கள்ளிப்பால் தந்து சிசுவைக் கொலை செய்திடும் காட்டுப்புறத்து மனிதரையும், அறிவியல் வழிபற்றிக் கருவினைக் கலைக்கும் நாட்டுப்புறத்து நங்கையரையும் அன்னை காந்திமதிக்குச் சுட்டிக் காட்டி முருகனையும் விநாயகனையும் மக்களாய் ஈன்றது பற்றாது



என்று ஞானப்பால் ஊட்டிச் சம்பந்தனையும் தன் மகவாய் ஏற்றவள் தானே நீ. இப்படிப் பச்சைக் குழந்தை படுகொலைக் களத்தைப் பார்த்ததும் பாராதது போல் இருக்கலாமா” என்றொரு கவியில் பாடுகிறார்.

ஊருக்கும் உலகுக்கும் நலம் வேண்டிப் பல கேட்டுப் பரிந்துரைத்த கவிஞர், தமக்கென்று தாயை வேண்டும் போது,

“ஒரு போதும் தீமைகள்
எவருக்கும் இழைத்திடா
உயிர்கொண்ட நல்ல வாழ்வை தந்து
நான் எனும் உணர்வினைச்
சுத்தமாய் அறுத்தெனை
நலமாக்கி அருளவேண்டும்”

என்று கேட்பது நம்மை நெகிழ வைக்கிறது. நூல் முடிவில் தம் தாய் காந்திமதியிடம் அவர் வைக்கும் வேண்டுகோள் “வாழ்க தமிழுடன்” என்று தன் குறிக்கோளை நிலை நாட்டும் விதத்தில்

“முற்றிய உடலிதை
விட்டு நான் பிரிகையில்
முத்தமிழ் ஆக்கி அருள்க”

என்ற வரிகளைப் படிக்கும்போது,

“சாம்பொழுதும் தமிழ்பேசிச் சாக வேண்டும் என்
சாம்பலிலும் தமிழ் மணந்து வேக வேண்டும்”

என்று புதுவைக் குயில் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனையே தொட்டு நிற்கின்றார்.



முடிவாக,

கவிதை, தடுமாறும் மனிதரைத் தாங்கும் ஊன்றுகோல்;
மனிதரின் மனப்பசி தணிக்க உணர்வுக் கனிகளை
உதிர்க்கும் கற்பகம்;
கவிதை, உலகை அளக்கும்; கல்லுக்குள் ஈரத்தைக் கசிய
வைக்கும்;
மனத்தைச் சமன் செய்யும்; மனிதம் பேணும்;

இவை எல்லாம் நெல்லை கண்ணனின் கவிதையில் கண்டேன். சிலவற்றைத்தான் காட்டினேன்.

பொழிலுக்குள்ளே போவதும், பூப்பறித்து நுகர்வதும் இனி உங்கள் வேலை.

பெரும்புலவர் மி.செ. கிரகோரி
தூய சவேரியார் மேனிலைப்பள்ளி
பாளையங்கோட்டை

வடிவுடைக் காந்திமதி கவிதையின் எளிமை தாமிரபரணி ஆற்றொழுக்கு போல அதன் ஒழுக்கு என்னைக் கவர்ந்த முதல் அம்சம். காந்திமதி அன்னையை கடவுளாக நீங்கள் பாவிக்கவில்லை. சொந்த அன்னையாகவே நீங்கள் பாவித்திருக்கிறீர்கள். உங்கள் வருத்தங்களையெல்லாம் காலடியில் கொட்டியிருக்கிறீர்கள். உங்கள் வருத்தங்கள் என்பவை தமிழ்ச் சமூகத்தின் வருத்தங்களாக இருப்பதைக் கண்டு கவிதையில் என் ஈடுபாடு மேலும் ஆழம் கொள்கிறது.

"முட்டாள்கள் மத்தியில்
முறையான விசயங்கள்
மொழிந்ததால் இழிவு பெற்றேன்...
முறையானோர் மத்தியில்
ஊமையாய் நின்றதால்
முதலாகும் புகழை விட்டேன்"

உங்களையே பிழிந்து சாறெடுத்துத் தந்திருக்கிறீர்கள். உழுபவர் வாழ்க்கையில் அழுகையே என்றுமே சரித்திரம் ஆகினோர் வழிதனில் சென்றவர் தரித்திரம் ஆகினாரே

கறவாத பசுக்களுக்கு உதவாத காளைகள் காளைகளாகி என்ன? பெண்களின் வெற்றியைக் கண்டபின் அசிங்கமாய் கதைகள் சொல்வார். கள்ளிப்பால் தந்திங்கு குழந்தைகள் கொல்லுறார் காட்டுப்புறத்தார் என்பார். ஆய்ந்திடும் விஞ்ஞான வழியிலே கருவினை கலைத்து நிற்பார் என்றெல்லாம் அருமையான சமூக விமர்சனம். உயர்வான எண்ணங்கள் வழி நூறு காட்டிவிட உதவுக என்ற அன்பான வேண்டுகோளாய் மலர்வது அருமை.

மாறிட மாறிட மாறிட மாறிட மனிதருக்கு அச்சமில்லை. கூறிட கூறிட கூறிட கூறிட கொள்கைக்கு பஞ்சமில்லை. மொழியை நிரம்பவும் வசப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்.

அருமையான நூல். பயணங்கள் போது இனிமையாய் துணை வரும். பாராட்டுகிறேன்.

பொன்னீலன்

அன்பிற்குரிய கண்ணன்...

வணங்கி மகிழ்கிறேன். வளமும், நலமும் சூழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நீங்கள் கொடுத்த "வடிவுடைக் காந்திமதியே" கவிதை நூலை நான் திரும்பத் திரும்பப் பன்முறை வாசித்து நெஞ்சம் மகிழ்ந்தேன். கவியரசர் கண்ணதாசனுக்குப் பின்பு சந்தம் இனிக்க, மரபில் மயக்கம் தருகின்றாற்போல் எழுதுவதற்கு நிகழ்காலத் தமிழரிடையே இன்னொருவர் இல்லை என்ற என் திடமான முடிவை உங்கள் நூல் மாற்ற முயன்றது மறுக்க முடியாத உண்மை...

பலவகையான யாப்பில் அமைந்த பாடல்களைப் படிக்கப் படிக்க வகைவகையான சந்தங்கள் வசப்படும். "குமரேசசதகம்" கண்ணதாசனைப் பாதித்ததில் "அவிவேகசிந்தாமணி" கிடைத்தது. கவிஞரின் அவிவேகசிந்தாமணியின் பாதிப்பில் கண்ணனின் "வடிவுடைமைக் காந்திமதியே" கனிந்தது.

"Sheelly exhaled verse as a flower exhales fragrance, Rhythm came as naturally to him as breathing" என்றான் டிரிலான். மலருக்கு நறுமணம் போல் கண்ணனுக்கு கவிதை இயல்பான மூச்சாய் கனிந்து விட்டதையே "வடிவுடைக் காந்திமதி" காட்டுகிறது.

உங்கள் நூலில் எந்தப் பகுதி சிறப்பானது என்று சொல்ல முனைவது வெல்லப் பிள்ளையாரில் எந்தப் பக்கம் சுவையானது என்ற ஆய்வதற்கு ஒப்பான பேதமையாகும்.

"பிள்ளைகள் மத்தியில் கட்சியைக் கொடியினைப்
பேடியர் திணிக்கின்றாரே
பெரியவர் மத்தியில் வெறிகளை மூட்டி பல
பேதங்கள் வகுக்கின்றாரே"

என்ற நேர்மையற்ற அரசியல் உலகத்தின் நெறியற்ற



போக்கினை நெஞ்சுரத்துடன் நெருப்பு வார்த்தைகளால் விமர்சிக்கும் போதும்...

“தாய்மையை வணங்கிடும் பண்புகள் கொண்டவர்
தாங்களே என்று சொல்வார்கள்
தரித்திரப் பட்டிடும் தாய்க்குல உடல்களைத்
தாங்களே விலையும் கொள்வார்”

என்ற பொய்மையும்,போலித்தனமும் கொண்ட மலினமான மனிதர்களின் மன விகாரங்களை நிர்த்தாட்சண்யமாய் நிர்வாணப்படுத்தும் போதும்...

“சத்தியம் காத்திடத் தங்களை தந்தவர்
சரித்திரம் ஆகினாரே
சரித்திரம் ஆகினோர் வழிதனில் சென்றவர்
தரித்திரம் ஆகினோரே”

என்று காந்தியப் பண்பு நலன்கள் முற்றாகப் பறிபோய் மூளியாகிவிட்ட பொது வாழ்வின் போக்கைக் கண்டு நெஞ்சம் பொறாமல் கசிந்துருகும் போதும் தேவையற்ற, வாலிப வயோதிக அரிதார ஒப்பனைகள் ஏதுமின்றி வார்த்தைகள் உங்களிடம் இயல்பாய், எளிமையாய், வந்து விழுவதை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை. நண்பரே... நீங்கள் கயிறு பின்னிப் புலவன் இல்லை என்பதற்கும், காந்திமதியைக் கரித்துணியாலே மூடவில்லை என்பதற்கும் வார்த்தைகளை அணிநயங்களுக்காக வலிந்து கற்பழிக்காத உங்கள் மொழி ஆளுமையே வலிமையான சான்று.

“வடிவுடைக் காந்திமதியே” என்ற தலைப்பைப் பார்த்ததும் ஒரு புதிய பௌராணிகப் புலம்பலாக இருக்கக்கூடும் என்ற நினைவோடு தான் நான் நூலுக்குள் நுழைந்தேன். கடவுள் வாழ்த்திலேயே “மனிதகுலம் உயர்ந்திடவோர் வழியைக் காட்டு” என்று பொதுநலச் சிறகடித்துப்



பறக்கும் உங்கள் கவிச்சிந்தனை மீதமுள்ள முப்பது பாடல்களிலும் வாழ்காலச் சமூகத்தின் மேடு பள்ளங்களில் ஓடித் திரிவதைப் பார்த்துப் பரவசமுற்றேன். சமுதாயத்தையும் மக்களையும் பிரிந்து வாழ்க்கையுமில்லை. இலக்கியமும் இல்லை.

"உயர்வான எண்ணங்கள்வழி நூறு காட்டிட
உதவுக எந்தன் அம்மா" என்று தொடங்கும் பாடலிலிருந்து (29)
"வெற்றிகள் அனைத்திற்கும் அடிப்படை அன்பென
விளங்கிட அருள்க அம்மா"

என்று தொடங்கும் பாடல்(31) அந்த மூன்று பாடல்களிலும் உங்களுடைய பண்பட்ட உள்ளத்தை, சகவுயிர்களின் நலன்நாடும் சமூகப் பொறுப்புணர்வை நான் தரிசித்து நெகிழ்ந்தது பொய்யின் நிழல் படாத நிஜம். நெல்லை கண்ணன் என்ற தேசியச் சிந்தனையாளனை, நக்கீர நேர்மையுடன் சமூகத் தீமைகளுக்கு எதிராக முற்றாகவும், மூர்த்தண்யமாயவும் மேடைதோறும் சொற்போர் நடத்தும் அரிதினும் அரிதான நாவன்மை மிக்க அரசியல்வாதியை, கம்பனிலும், பாரதியிலும், பட்டினத்தாரிலும், கண்ணதாசனிலும் ஆழங்காற்பட்ட இலக்கியத் திறனாய்வாளனை முன்பே நான் அறிவேன். ஆனால் நெல்லை கண்ணனுக்குள் ஓர் அற்புதமான கவிஞனும் நேற்றுவரை மறைந்திருந்து இன்று விசுவரூபத்துடன் வெளிப்பட்டதைக் கண்டு வியந்து நிற்கிறேன்.

இறுதியாக ஒரு வார்த்தை... கல்லறைக்கள் கண்மூடித் துயிலும் கவியரசர் கண்ணதாசன் வடிவுடைக் காந்திமதியைப் பாட மீண்டும் நெல்லை கண்ணனில் உயிர்த்திருக்கிறார்.

தமிழருவி மணியன்

புகழுரைத் தோரணம்



பொதுவாக உண்மைகளை விட 'ரகசியங்கள்' அதிகம் விரும்பப்படுகின்றன. சொல்பவனுக்கும், கேட்பவனுக்குமிடையே அந்தரங்கமான நெருக்கம் வந்திருப்பதற்கான முதல் அறிகுறியே ரகசியம் பேசுவதுதானென்பது ஒரு காரணம். இந்த இரண்டு பொருத்தங்களும் நமக்கிடையே இருப்பதாலோ என்னவோ, குறுக்குத்துறை ரகசியங்களை மிகவும் நேசித்தேன்.

ஆதி மனிதர்கள், இயற்கையோடு இசைந்து வாழ்ந்ததை, 'நாகரிகம்' என்று வரலாறு கூறுகிறது. இன்றைய மனிதர்கள் செயற்கையோடு பின்னிக் கொள்வதை 'நாகரிகம்' என்று அர்த்தப்படுத்திக் கொண்டு விட்டனர். அதனால் நெல்லையின் பூச்சில்லாத அழகைப் பார்க்க வேண்டுமானால் 50 வருடங்களுக்கு முந்தைய கதைகளில் தேட வேண்டிய கட்டாயம். குறுக்குத்துறை ரகசியங்கள், இந்த அவதியை உடைத்து அரிதாரம் பூசாத நெல்லை மண்ணை அறிமுகப்படுத்தி நெகிழ வைத்திருக்கிறது.

இலைகள் உதிரலாம், உதிர்ந்தாலும் வேறு இலைகள் துளிர்விடும். கிளைகள் கூட முறியலாம். முறிந்தாலும் புதிய கிளை முளைக்க வாய்ப்புண்டு. ஆனால் வேர்கள்...? உங்களுக்கு வேராக மட்டுமே இருந்து, வேறாக இருக்கத் தெரியாத உங்கள் துணைவியாரின் பிரிவும், ராவன்னாவின் மறைவும் எத்தனை தூரம் உங்களை பாதித்திருக் கின்றன என்பதற்கு கடைசி அத்தியாயமே சாட்சி.

'வேரென நீயிருந்தாய், அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்' என்ற பாடல் வரிகள் உங்களுக்கு மட்டுமே சொந்தமாகி நீங்கள் தளர்ந்து விடுவதை ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால் இதே பாடலை உங்களைப் பார்த்துப் பாட உங்கள் பிள்ளைகளுக்கும், ஏன் எனக்கும் கூட உரிமை இருக்கலாமல்லவா?

மற்றபடி மருத மரங்கள், நாவல் மரங்கள், ஆனைப்பாலம், மின்னடிப் படித்துறை புடைசூழக் கிடக்கும் அந்த குறுக்குத்துறை...! முருகன் கோயில் சாம்பலை நெற்றியில் பூச நினைக்காத எனக்கும், அந்த மண்ணில் சாதித்த பிறகு சாம்பலாய் மாறிவிடும் ரகசியமான ஆசை உண்டு... மறுபடியும் பிறப்பதற்காகத்தான்.

தமிழன் எக்ஸ்பிரஸ்

பதிவு அலுவலகம் : எக்ஸ்பிரஸ் டவர்ஸ்,
நாரிமன் பாயிண்ட், மும்பை - 400 021.



புதுமைப்பித்தனின் ஆழம், பாரதியின் நேர்மை, டி.கே.சியின் ரசனை மூன்றின் தொடர்ச்சியாக நெல்லையிலிருந்து நமக்குக் கிடைத்த தமிழ்ப் புதையல் அய்யா நெல்லை கண்ணன்.

சுவாசிப்பதைப் போல ஒவ்வொரு நாளும் வாசிப்பதை இயல்பாகக் கொண்டிருக்கிற கல்வியாளர்.

தொல்காப்பியத்திலிருந்து தினத்தந்தி வரை தமிழ்க்கடலுக்குள் ஒரு டால்பினை போல துள்ளிக் குதித்து விளையாடி அந்த அற்புதத்தில்... ஆச்சரியத்தில்... அதிசயத்தில்... நம்மையும் ஆர்ப்பரிக்க வைக்கிறார்.

ஒரு காலத்தில் நயாகராவைப் பார்க்கப் போனவர்கள் வால்ட் விட்மனையும் பார்த்து விட்டுத் திரும்பியதைப் போல தாமிரபரணியைப் பார்க்கப் போகிறவர்கள் இந்த தமிழாளரைத் தரிசிக்காமல் திரும்பினால் அந்த நெல்லைப் பயணம் முழுமையாகாது.

எஞ்சி நிற்கிற இவர் போன்ற ஒரு சில தமிழறிஞர்களையாவது தமிழ்ச் சமூகம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

“சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் (அ) இவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது”

பழனிபாரதி
ஏ3, பூபதி நகர், சென்னை – 600 024.

ஆசிரியரின் வா மீதமுலை எறி நூல் குறித்து...

தமிழன் எக்ஸ்பிரஸ்

தனது வசீகரமான பேச்சால் மைக் செட் வைப்பவர் முதல், மதியூகிகள் வரை கவர்பவர் நெல்லை கண்ணன். அவரது புதுக்கவிதை 'வீச்சுகள்', 'வா மீத முலை எறி' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.

வித்தியாசமான அமைப்பு, நேர்த்தியான வெளியீடு என்ற புத்தகத்தின் வடிவச் சிறப்பு ஒருபுறம்... சுளீர், சுளீரென்று வீசுகின்ற கண்ணனின் கவிதை மறுபுறம்...! சரியான ஜுகல்பந்தி.

"சிலுவையில் இயேசு இரத்தம் வழிய!
போப்பாண்டவரோ புல்லட் புரூ∴பில்"

"உலகத் தமிழர்கள் ஒன்றுபடுங்கள்!
உள்ளூர்த் தமிழர்கள் சாதி பேணுங்கள்."

போன்ற சின்னச் சின்ன 'சிலீர்'கள் புத்தகம் முழுவதும்.

'உண்ணாமுலையாள் பேரழகு காக்க கார்த்திகைப் பெண்கள் மார்பகம் தந்தனர்' என்று 'பராசக்தியை பாமரப் பார்வையால் பார்க்கும் கண்ணன், குட்டினை எங்களின் தலையிலும் அருளிடக் குமரனுக்கு உணர்த்து தாயே' என்று இன்னொரு கவிதைப் புத்தகத்தில் பக்திக் கண் கொள்கிறார்.

அதுசரி, 'சக்ஸஸ் ∴பார்முலா' பத்திரிகைகளுக்கு மட்டும் தானா? படைப்பாளிகளுக்கும் உண்டே!

விகடன் புக் கிளப்

நெல்லை கண்ணன் சுவாரஸ்யமான பேச்சாளர், ஏராளமான துறைகளில் வேண்டிய மட்டும் தெளிவை வைத்திருப்பவர். அவரின் நறுக்குக் கவிதைகள் கொண்ட தொகுப்பு வெளியாகியிருக்கிறது.

ஓலைச்சுவடி போன்ற நீள் செவ்வக புத்தக அமைப்பே கையிலெடுத்துப் புரட்ட வைக்கிறது. கஷ்டப்படாமல் துரிதமாக அடுத்தடுத்துப் படித்துப் போகலாம். ரசித்தும் வைக்கலாம். சில கவிதைகள் வேடிக்கை போலத் தோன்றினாலும், உள்ளே சற்று நின்று யோசிக்கத் தூண்டும். வலிக்காமல் படிக்கலாம்.

சாம்பிளுக்கு...

தோண்டிய
குழியில்
கொள்கைகள்
புதைத்தால்
காவலாய்
தலைவரே
சிலையாய்
நிற்பார்.

சினேகன் – 'தாமரை' – மாத இதழ்

இன்றைய தமிழ் படைப்புச் சூழல் குறித்து...

தமிழ்ப்புலமை என்பது இலக்கண மறியாக் கொடுமையாகவும், இலக்கிய பாரம்பரியம் அறியா மடமையாகவும் மெல்ல மாற்றம் கொண்டிருப்பது ஒரு சூழல். நவீன இலக்கியச் சிந்தனையே கதி மோட்சம் என்ற சொந்த மூலதனங்களை அறியாத தறிகெட்ட போக்கு இன்னொரு சூழல். பழமையும் தெரியாது, புதுமையும் புரியாது இருட்டு வீட்டுக் கருப்புப் பூனைகளாய் மனப்பால்



குடிப்போர் மற்றொரு சூழல், முறையான கல்விப் பயிற்சி இல்லாத முயற்சியால், பட்டறிவால், தேடுதலால் பூரண இலக்கிய ஞானம் கைவந்த தேர்ந்த வாசகர் வேறொரு சூழல் என படம் பிடித்துக் காட்டுவார் கவிஞர் சிற்பி. இச்சூழ்நிலைகளைப் புரிந்து கொள்வன கொண்டு அல்லன தள்ளி வினையாற்று பவனே படைப்பாளியாய் மிளிர முடியும். அவ்வரிசையில் பேச்சாளராக அறியப்பட்டு நெல்லை கண்ணன் எழுத்தாளராகவும் பரிணமிக்கிறார்.

எழுத்து, பேச்சு இரண்டும் கைவரப் பெற்ற ஒரு சிலரில் நெல்லை கண்ணனும் ஒருவர். வசீகரமான திருநெல்வேலித் தமிழால், புதுமைச் சிந்தனைகளால் மேடைப்பேச்சை இலக்கிய கௌரவ மிக்கதாக மாற்றிக் காட்டிச் சுடர்விட்டார். தன் வயதுக்கு மீறி புதுக்கவிதைகளில் முயன்று “வா மீதமுலை எறி” என இவர் கூறும்போது இவரின் சீரிளமை திறம் வியந்து பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது.

இக்கவிதைகள் நிகழ்வாழ்வைப் பிரதிபலிக்கின்றன. தாயின் கருப்பைக் கிழித்து ஒழுகும் உதிரத்துளிகளோடு பிரபஞ்ச வெளிக்கு வருகிற குழந்தையாய் சூடாக சிந்தித்து மேடையேறி வந்த கவிதைகள் இவை. இவர் பேச்சின் எள்ளலும் எகத்தாளமும் தாமிரபரணி நீர் குடித்த தினவும் இக்கவிதைகளை விட்டு வைக்கவில்லை.

கொள்கைகள்
இறந்ததை
அறியாக் கொடிகள்
தலைவர்கள்
இறந்ததும்
தாழப்பறந்தன

என கொள்கையற்ற இன்றைய அரசியலைச் சாடுவதும்,

வெண்மணிச்
சூட்டைத்
தணிப்பதற்காகவா



தாமிரபரணியில்
முக்கி
எடுத்தீர்கள்

என உழைப்பாலும், சாதியாலும் ஒதுக்கப்பட்டோரை நிலமும், நீரும், நெருப்பும் கொண்டழிக்கும் சக்திகளை இனம் காட்டுகிறார்.

எய்ட்சுக்கு உறைகண்டவர்கள் அதனிலும் கொடிய 'கையுறைகளுக்கு' மருந்து கண்டார்களில்லை. பல்கலைக் கழகத்தைப் பார்த்து காகம் வர மறுக்கிறது. டாக்டர் பட்டம் கொடுத்து விடுவார்கள் எனப் பயந்து, தாய் தந்தை அலுவலகம், குழந்தை பள்ளி, தாத்தா பாட்டி முதியோர் இல்லம், துணையின்றி வீசனப்படுகிறது. வீட்டுப்பூட்டு, புத்தரின் பல், காந்தியின் கண்ணாடி, கைத்தடி கடிகாரம் பத்திரப்படுத்தினோம்... ஆனால்?

கிளி எடுத்த அட்டையில் கருடன் பறக்கிறது. சிலுவையில் இயேசு இரத்தம் வழிய போப்பாண்டவரோ புல்லட் புரூஃபில் போகிறார். இப்படி வித்தியாசமான சிந்தனைகள் நூல் முழுவதும் கவிதைகளாக வலம் வருகின்றன.

பெரியமகன் அமெரிக்காவில்
சின்னமகன் லண்டன் மாநகரில்
கடைசிமகனோ ஆஸ்ரேலியாவில்
அந்நியர் இந்தியாவை ஆள
அனுமதியோம்
இந்திய நாடு எங்களின் நாடு
ஜெய்ஹிந்த்

என்ற கவிதை நடிப்புச் சுதேசிகளின் முகத்தில் அறைகிறது.

ஓடிப்போன
சாமியைக் காட்டிலும்
உள்ளூர்ச்சாமி
ஒசத்திதான் வே.



வா.்.பர்
அய்யப்பன்
வழிபாட்டுறவை
ராமர்
பாபருக்கும்
நீட்டித் தொலையுங்கள்

என்ற கவிதை வரிகளில் இவரின் சமூக கரிசனம் வெளிப்படுகிறது.

"பாட்டிலே அறம் காட்ட வேண்டும். கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக் கொண்டு வையம் முழுவதும் பயனுற வேண்டும்" என அணிந்துரையில் தோழர் தா. பாண்டியன் கூறியதை அப்படியே வழி மொழியலாம்.

அரசியல், ஆன்மீகம், காதல், வாழ்க்கை என பலவற்றையும், நுணுகிப் பார்த்து பார்த்ததை பார்த்தபடி சொல்லாமல் தன் அனுபவம், அறிவு, பார்வை வழி விசாரணை செய்து தீர்ப்புகளைப் பதிவு செய்கிறார். மேலோட்டமாக பார்த்தால் எளிய நேர்ப்பேச்சாய் தெரியவரும். இக்கவிதை களுக்குள்ளும் ஒரு திட்டமிடாத அழகியல் தன்மைகள் கலை வெளிப்பாடுகள் காணக் கிடக்கின்றன. வெடிப்புற பேச விரும்பும் மக்களியக்கத்தின் கூறுகள் இவரின் கவிதைகள் இயக்குவதை உணர முடிகிறது.

திங்கப் பொறந்தவன்
திருநெல்வேலிக்காரன்
எழுத்து கவிதை
எல்லாத்தையுந்தான்

என்கிறார் நெல்லை கண்ணன். திங்க மட்டுமல்ல விருந்தோம்பலிலும் திருநெல்வேலிக்கு சிறப்புண்டு. இது நெல்லையின் இலக்கியப் படையல்.

அச்சும் அமைப்பும் அழகான இந்நூலை வாங்கிப் படிக்கலாம். திருநெல்வேலி அல்வா மாதிரி.

ஆசிரியரின் குறுக்குத்துறை ரகசியங்கள் நூல் குறித்து...

"குறுக்குத்துறை ரகசியங்கள் பின்னுரை, முன்னுரை இவைகளைத் தள்ளிவிட்டு எழுத்தை மட்டும் முழுப்படமாகப் பார்க்கிறவர்களுக்கு இது ஒருவகை குறுநாவல்" என்று தெரியும். உண்மை அதுதான். கேரளத்தில் நாவலும் நாடகமும் கலந்த ஒரு இலக்கிய வடிவத்தை படைப்பாளிகள் பரிசோதித்ததாக நண்பர் குறிஞ்சிவேலன் பேச்சினூடே ஒருநாள் சொன்னார்.

உங்களை அறியாமலேயே இதில் சாத்தியமாகியிருக்கிறது. அத்தியாயங்களை காட்சி காட்சியாக கோர்த்துக் கொண்டே போய் முடிக்கிறீர்கள். குறிப்பிட்ட பாத்திரங்களை வைத்து மக்கள் மொழியிலேயே மக்களைப் பற்றிச் சொல்லுகிறீர்கள். இதுதான் சரி, விசயத்தைச் சொல்லும்போது வடிவம் தானாகவே அமைந்து விடுகிறது. வேண்டியதெல்லாம் ருசியாக இருக்கணும் என்பதுதான். உங்கள் எழுத்தில் இது இருக்கிறது. பலகாரம் செய்து தேர்ந்துவிட்டால் பிறகு விதம்விதமாக செய்யத் தோன்றும். பிறகு அவன் செய்வதெல்லாம் பலகாரந்தான். மக்கள் விசாரித்துத் தேடி வருவார்கள். "இருட்டுக்கடை" எங்கே இருக்கு என்று!! தொடர்ந்து நீங்கள் சொல்ல வேண்டும் என்று தோன்றுவதையெல்லாம் எழுத்தில் சொல்லலாம். எழுத்திலும் நீங்கள் வெற்றி பெற வாழ்த்துக்களுடன்.

கி. ராஜநாராயணன்

"குறுக்குத்துறை ரகசியங்கள் உங்களுக்குள் புதைந்திருக்கும் நல்ல எழுத்தாளரை அம்பலப்படுத்துகிறது. இருமுறை படித்து விட்டேன்! அடேயப்பா! உயிரோவியமாகத் திகழும் எத்தனை காட்சிகள்! நெல்லைத் தமிழ் கொஞ்சி விளையாடுகிறது."



இச்சித்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தலைப்பு தந்து வெளியிட்டிருந்தால் நூல் ஒரு நல்ல சிறுகதை தொகுப்பாக அமைந்திருக்கும். நல்ல முயற்சி. என் பாராட்டுக்கள்!

வடிவுடைக் காந்திமதியே... கவிதைகளைப் படித்தேன். கவிதைகள் ஓட்டமாக உள்ளன. "தந்ததிமி தோம் திமிதி திந்ததிமி என்று வரும் தன் பொருநை நாதம்" போலக் கவிதைகளும் நடைபோடுகின்றன. "தெளிவான மரணமும் உண்டென்று தெரிந்த பின் தினந்தோறும் ஆசையென்ன" என்னும் தொடர் ஒவ்வொருவர் நெஞ்சிலும் நிற்க வேண்டிய தொடர். "வறியவர் பசியிடைச் செய்கின்ற பிழைகளில் வானளவு குதிக்கும் அரசு வளமானோர் திருடிடச் சட்டத்தை துணையாக்கி வாழ்த்திடும் அழகு என்ன" என்னும் கவிதைப் பகுதி இன்றைய சமுதாய அவலத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது. "மண் வாழ்க்கை மடிகையில் மணமாக வாழ்ந்ததாய் மனங்களில் வாழவைப்பாய்" என்னும் பிரார்த்தனை உயர்வானது; உள்ளத்தைப் பிரதிபலிப்பது. திரு. கிரகோரி நன்கு படித்து அணிந்துரை வழங்கியுள்ளார்.

முனைவர் தெ. ஞானசுந்தரம்

நெல்லை கண்ணன் சிறந்த அரசியல் சொற்பொழிவாளர்; இலக்கியப் பேச்சாளர்; நகைச்சுவையை அள்ளி விடுவதில் சமர்த்தர்; எல்லாவற்றுக்கும் மேலாக நல்ல நண்பர்!

சில தினங்களுக்கு முன் என்னை சந்தித்தபோது "குறுக்குத்துறை ரகசியங்கள்" என்ற தலைப்பில் தாம் எழுதிய புத்தகம் ஒன்றை பரிசளித்தார்.

"தமிழன் எக்ஸ்பிரஸ்" என்ற ஏட்டில் அதன் அப்போதைய ஆசிரியர் அன்பர் சுதாங்கன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர் எழுதிய தொடர், புத்தக வடிவம் பெற்று இருக்கிறது. சேர்ந்து கிடக்கும் புத்தகங்களைப் படிக்க எனக்கு தோதான இடம் ரயில்! இரண்டு டிக்கெட்டுகளை வாங்கி, ஒரு "கூபே"யில் அடைந்து கொண்டால் எந்த தொந்தரவும் இல்லாமல் ஆனந்தமாக படித்துக் கொண்டே பயணிக்கலாம்! மேல் பர்த்தில் கவிழ்ந்து படுத்து, "ரீடிங் லைட்"டைப் போட்டு நெல்லை



கண்ணனின் புத்தகத்தில் ஆழ்ந்தேன். ஒவ்வொரு அத்தியாயமும் அடக்க முடியாத சிரிப்பைத் தரும் அதே நேரத்தில், வாழ்க்கைப் பாடத்தையும் போதிக்கிறது. நெல்லைத் தமிழ் தெரிந்தவர்கள் சந்தோஷித்துப் படிப்பார்கள்.

நாயகர் அண்ணாச்சி! அது நெல்லை கண்ணனாகத் தான் இருக்க வேண்டும். அடுத்து அவரது உதவியாளராக "ராவன்னா", "அம்பி" எனப்படும் வேலை வெட்டி இல்லாத ஊர் வம்பிழுக்கும் பிராமண கேரக்டர் இந்த அம்பி அண்ணாச்சியின் அன்பைப் பெற்றவன். மற்ற கேரக்டர்கள் ஊர் ஜனங்கள், அண்ணாச்சி ஊர் பெரியவர், தனவந்தர் என்பதால் ஊர்பஞ்சாயத்து, குடும்ப பிரச்னை, கொடுக்கல் வாங்கல் தகராறு என அனைத்து விஷயங்களும் அண்ணாச்சியிடம் வரும். அவற்றை சுமூகமாக தீர்த்து வைப்பார் அண்ணாச்சி.

அந்துமணி

நெல்லை கண்ணன் அவர்களின் "குறுக்குத்துறை ரகசியங்கள்" நடைசித்திரங்கள் மட்டுமல்ல. நல்ல சிறுகதைகளே...

திருநெல்வேலித் தமிழின் உண்மையான வடிவத்தை இந்த "அண்ணாச்சி ராவன்னா" கதைகளில் பார்க்க முடிகிறது.

சுஜாதா
ஆனந்த விகடன்

தாங்கள் அற்புதமாக எழுதியுள்ள "குறுக்குத்துறை ரகசியங்கள்" வாசிக்க நேர்ந்தது. என்ன நடை! என்ன சொல்லாற்றல்! இருட்டுக்கடை அல்வாவை இலையில் ஒரு துளி கூட இல்லாமல் வழித்துத் தின்பது போல ஒரே மூச்சில் நூலைப் படித்து முடித்தேன்.

கே.கே. ராஜன் (எட்டயபுரம் ராஜன்)

ஆனந்த விகடன்

அண்ணாச்சிக்கு!

தம்பி ஜெயந்தா வணங்குகிறேன். இதெப்படி சாத்தியமாயிற்று...?

கலப்படமே இல்லாமல் கைகள் வார்க்கும் மண்பானையாய் நிஜமான நெல்லைத் தமிழை தாள்களில் பொதிந்து தந்துவிட முடியுமா...?

முடிந்திருக்கிறது. நீங்கள் என்பதால்...?

திருநெல்வேலி என்றால் தாமிரபரணி, ஆனிப்பொருட்காட்சி, நெல்லையப்பர் கோவில், இருட்டுக்கடை அல்வா, ஈரடுக்கு மேம்பாலம்.

இவற்றோடு இனி "குறுக்குத்துறை ரகசியங்கள்" தான்

நெல்லைத் தமிழில் நெய்திருந்தாலும் இது தமிழன்னை மேல் புரள்கிற ஆடையல்ல!

கமழ்கிற வாடை!

நெல்லை ஜெயந்தா

அம்மன் சந்நதித் தெரு, பெரிய வீட்டு வாசலில் சில மணி நேரம் நின்றேன். அண்ணாச்சி இருக்கையில் இருந்தார்கள். ராவன்னா திண்ணையிலிருந்தார். ரவி, சுப்புலெஷ்மி, கமிஷன் கடை மாமா, மாக்களை மாமா, கட்டையன், முருகன், சுப்பையா, சங்கீத சார்வாள், நெல்லையப்பன், மீனாட்சி இப்படி நிறைய பேர் வந்து அவுங்க அவுங்க பிரச்சனைய பேசினாங்க. தராதரம், பந்தா எதுவுமில்லாமல் எல்லாக் காயத்துக்கும் அண்ணாச்சி மருந்து தடவி அனுப்பினாவ. தென்றலும், திருநெல்வேலித் தமிழும் சுகமாக இருந்தன.

அடடா! புதுமைப்பித்தன் பார்த்தா புரண்டிருப்பாரு.

கடைசிப் பக்கம் கண்கலங்கச் செய்தது. நேரு தன் இறுதி விருப்பத்தில் என் சாம்பல் கங்கையிலும் யமுனையிலும் கலக்க வேண்டுமென்றார்.

அந்த மகானைப் போற்றும் தங்களுக்கு குறுக்குத்துறை தாமிரவருணி மேல் எவ்வளவு பற்று?

"வடிவுடைக் காந்திமதியை" வணங்குவதோடு நிற்கவில்லை. வாட்டம் காட்டி கேட்ட வினாக்களால் விழித்திருப்பாள்.

புலவர் க. சண்முகம்

வழிவுடைக் காந்திமதியே

01

சந்தனத் தருக்களுடன்
செண்பகப் பொழில்களவை
சார்ந்துள்ள பொதிகை விட்டுச்
சதிராடி நடை பயிலும்
கனியான தமிழுக்குச்
சரியான தாளமிட்டுத்

தந்ததிமி தோம்திமிதி
திந்ததிமி என்றுவரும்
தண்பொருநை நாதம்கேட்டுத்
தாவிவரும் நடையழகின்
அமைவான தாளமதில்
தாவியதே இந்தப்பாட்டு

உந்தனிரு பதமலரில்
வைக்கின்றேன் மனிதகுலம்
உயர்ந்திடவோர் வழியைக் காட்டு
உலகங்கள் ஆளுமொரு
வேணுவன நாதரவர்
உளமார்ந்த காந்திமதியே!

02



பொழிலார்ந்த காடுகள்
எழிலார்ந்த கழனிகள்
பொங்கிவரும் நதிகளோடு
பொன்னார்ந்த மண்ணிதில்
எண்ணார்ந்த கனிவளம்
பூமிதரும் விதிகளோடு

தெளிவார்ந்த மனிதனும்
திறமான வழிகளில்
தேடியரும் பணிகளூடு
தினமாழ்ந் துழைத்துமே
சிலபேர்கள் மட்டுமே
வாழ்கின்றார் திருவினோடு

அறிவார்ந்த மனிதர்தம்
நலம்பேண வேண்டியே
அன்னையே வணங்கி நின்றோம்
ஆடலான் தன்னையும்
அன்புடன் பேணிடும்
அன்னையே காந்திமதியே!



03

திட்டமில் லாததொரு
மனிதப் பிறவியாய்த்
தெய்வமே வந்து சேர்ந்தேன்
தெருவுந்தன் சந்நிதி
என்பதால் கொஞ்சமாய்த்
தெள்ளுதமிழ் அறிவு பெற்றேன்

எட்டாத கனவுகள்
ஆயிரம் கொண்டதால்
ஏக்கங்கள் அதிகம் பெற்றேன்
ஏக்கங்கள் அனைத்தையும்
தமிழன்னை ஏற்றதால்
எண்ணிலாக் கவிதை சொன்னேன்

பட்டாள அணிபோலத்
துயரங்கள் எனைநோக்கிப்
பாய்வதும் நியாயந்தானோ?
பலகோடி உயிர்களை
ஒருகுளிர்ப் பார்வையால்
பதமாக்கும் காந்திமதியே!

04



உழுபவர் வாழ்க்கையில்
அழுகையே என்றுமே
உற்சாகம் கொள்வதென்ன!
உழுபவர் தங்களால்
உயர்ந்தவர் செல்வத்தோ
டுறவுகள் கொள்வதென்ன

அழுகையும் வறுமையும்
உழைப்பவர் சொத்தென
அகிலமே வாழ்வதென்ன!
அவர்களால் உயர்ந்தவர்
சுகத்தின்மேல் சுகங்களை
அடைவதில் நியாமென்ன!

பழுதான சமுதாய
அமைப்புகள் தன்னையே
பார்த்துமேன் மௌனம் தாயே!
பழமதை மூத்தோனுக்
களித்தங்கு இளையோனின்
பழிகொண்ட காந்திமதியே!



05

கோழை களாகியே
நல்லவர் கூட்டமும்
கொள்ளையர்க் கடிமையாகும்
கொடுமைகள் தன்னையே
உலகெங்கும் கண்டனம்
கொற்றவை சரணடைந்தோம்

ஏழையென் றோரினம்
செல்வரென் றோரினம்
எவரிங்கு படைத்து வைத்தார்?
எவரென்ற போதிலும்
அவர்வழி வம்சங்கள்
இல்லா தொழிக்க வேண்டும்

நாளையா இல்லைஇக்
கணத்திலே கொடுமைகள்
நாடா தொழித்தல் வேண்டும்
நடம் செய்யும் இறைவனின்
உளம்தனி லாடிடும்
நளிர்மணிக் காந்திமதியே!

06



உண்மைக்கு வாழ்கின்ற
நல்லவர் உள்ளத்தில்
ஒருபோதும் அமைதி இல்லையே!
ஊருக் குழைத்திடும்
நல்லவர் இல்லத்தில்
ஒருநாளும் வளமை இலையே!

கண் மட்டும் திறந்திட்ட
பார்வையற் றோர்களின்
கவலைகள் தீரவிலையே!
கவலைகள் தீர்ந்திட
வழி சொலும் மனிதரின்
கனவுகள் ஓயவிலையே

பண்பற்ற மனிதர்தம்
பயமற்ற செயல்களைப்
பார்த்துமேன் மௌனம் தாயே
வளம் கொண்ட வயல்களை
வேலியாய்க் கொண்டிட்ட
வடிவுடைக் காந்திமதியே!



07

முட்டாள்கள் மத்தியில்
முறையான விஷயங்கள்
மொழிந்ததால் இழிவு பெற்றேன்
முறையானோர் மத்தியில்
ஊமையாய் நின்றதால்
முதலாகும் புகழை விட்டேன்

சத்தான உண்மையைப்
பேசிட முயன்றதில்
சரிபாதி நண்பர் விடடேன்
சரிபாதி நண்பர்கள்
தங்களால் நான் கொண்ட
சரிபாதி செல்வம் விட்டேன்

எத்தாலும் நெல்வேலி
யப்பனின் கைகளில்
இடையாட விட்ட மயிலே
இடையாடும் கையினைச்
சின்னேரம் நீக்கியே
என்னைப்பார் காந்திமதியே!



08

பிள்ளைகள் மத்தியில்
கட்சியைக் கொடியினைப்
பேடியர் திணிக்கின்றாரே
பெரியவர் மத்தியில்
வெறிகளை மூட்டிபல
பேதங்கள் வகுக்கின்றாரே

கொள்ளையர் அனைவரும்
மக்களின் மத்தியில்
கொற்றவர் ஆகின்றாரே
கூட்டத்தின் மத்தியில்
நல்லவர் போற்பல
கோஷங்கள் போடுறாரே

கள்ளத் தனத்துடை
மொத்த உருவங்கள்
கண்டுமேன் மௌனம் தாயே
கந்தவேள் தனக்கொரு
சக்திவேல் தந்திட்ட
கருணைமிகு காந்திமதியே!



09

தூய்மையை வணங்கிடும்
பண்புகள் கொண்டவர்
தாங்களே என்று சொல்வார்
தரித்திரப் பட்டிடும்
தாய்க்குல உடல்களைத்
தாங்களே விலையும் கொள்வார்

வாய்மையைக் காப்பதும்
தாங்களே என்றிங்கு
வான்முட்டக் கூவி நிற்பார்
வாய்ப்பிலா திருந்தவர்
தவறான வழியினில்
வாழ்ந்திடப் பயந்து நின்றார்

காய்ப்புகள் ஆயிரம்
கொண்டதொரு நெஞ்சிதின்
கவலைகள் அறிகிலாயோ
கலகலென நீரோடும்
பொருநையதன் கழனிகளில்
கதிர்காணும் காந்திமதியே

10



கற்றவர் தங்களின்
முட்டாள்த் தனங்களும்
கல்லாதார் அறிவாற்றலும்
கணிகையர் தாம்கொண்ட
கற்பின் ஒழுக்கமும்
கற்பிலாக் குலமாதரும்

பற்பல பற்பல
பற்பல விதமாகப்
பலப்பல விதமாகவே
பாரினில் மாறிடும்
வண்ணங்கள் யாவையும்
பார்த்தனம் ஒன்றுவேண்டி

பொற்பதம் பணிகின்றோம்
அன்னையுன் அருளினால்
பூமியில் இரண்டு வர்க்கப்
புன்மையை நீக்கியே
பொதுமையைச் செய்கநற்
பொழில்கள்சூழ் காந்திமதியே!

11



விதியெனச் சொல்லியே
ஒருதனிப் பாதையை
வீணர்கள் வகுத்து வைத்தார்
விளைகின்ற நன்மைக்கும்
தீமைக்கும் அது ஒன்றே
விளைவெனச் சொல்லி வைத்தார்

மதியெனச் சொல்லியே
ஒருதனிப் பார்வையை
மங்கைநீ தந்திருந்தாய்
மறந்ததை அனைவரும்
தலையினில் எழுத்தென்று
மதியினை இழந்து நின்றார்

கதியின்றி எதற்கேனும்
அடுத்தவர் சொல்லையே
கவனிக்கும் மனித உருவை
கனிவான உந்தனருட்
கடைக்கண்ணின் பார்வையிலே
காப்பாற்று காந்திமதியே!

12

புசித்தது செரித்திட
மருந்தினைத் தேடிடும்
புனிதர்கள் கூட்டம் கண்டேன்
புற்றிலே சேமிக்கும்
எறும்புகள் அரிசிக்கும்
போட்டிகள் நடக்கக் கண்டேன்

வசித்திடக் குடிசையும்
இன்றியே பலபேர்கள்
வதைபடும் நிலைகள் கண்டேன்
வாய்ப்பாக அரண்மனை
போன்றபல் வீட்டிலே
வாழ்வார்கள் தம்மைக் கண்டேன்

ஒசிந்திடும் இடையினில்
மேகலை ஒளிர்ந்திட
ஒரு கோடிச் சூரியர்தம்
ஒளியாவும் ஈடுசொல
வழியின்றிச் செய்துவிடும்
ஒண்ணகையின் காந்திமதியே!



13

சத்தியம் காத்திடத்
தங்களைத் தந்தவர்
சரித்திரம் ஆகினாரே
சரித்திரம் ஆகினோர்
வழிதனில் சென்றவர்
தரித்திரம் ஆகினாரே

புத்திமான் என்பவர்
மறைந்தவர் புகழினில்
புதுச்செல்வர் ஆகின்றாரே
பூமியில் நல்லவர்
வல்லவர் எனப்பல
புகழினைச் சேர்க்கின்றாரே

சத்தியம் நீதியும்
நேர்மையும் எங்கேனும்
சாகுமோ உண்மையுருவே
சரிபாதி தான் தந்த
இறையோனின் முழுமனதில்
தமிழான காந்திமதியே!

14

நீதியதன் உதவியுடன்
வாழ்ந்திட நினைந்தவர்கள்
நிலையதனைக் கண்ட பின்னும்
நெஞ்சதனில் அச்சமது
எள்ளளவும் இல்லாது
நீதியெதிர் நிற்பர் கண்டும்

ஆதிமுதல் உந்தனது
எண்ணமது இல்லாது
ஆடிடுவர் செல்வம் கண்டும்
அன்னவரின் எதிர்நிற்க
வழியின்றித் துன்பமுறும்
அறிஞரவர் நிலைகள் கண்டும்

வாதிக்கும் உயிரிதனின்
துன்பமது நீக்கிவிடும்
வகையேதும் செய்கிலாயோ
வண்டாடும் விழியழகில்
நின்றாடும் சிவனவனைக்
கொண்டாடும் காந்திமதியே!

15

நற்றமிழ் வார்த்தைகள்
பலகோடி யிருந்துமே
நலமற்ற வார்த்தை கொள்வார்
நலமற்ற வார்த்தைகள்
கொண்டவர் தந்தவர்
நாங்களே தமிழரென்பார்

கற்றபல் லறிஞரும்
அவர்வீட்டு முற்றத்தில்
கைகட்டிப் பணிந்து நிற்பார்
கைகட்டி வாய்பொத்தி
அவரின்றேல் தமிழுக்குக்
கதிவேறு இல்லை என்பார்

கொற்றவை உன்னையே
பணிகின்றோம் தொழுகின்றோம்
கொஞ்சுதமிழ் அன்னையுந்தன்
கூடப்பி றந்தாளின்
மானத்தைக் காப்பாற்று
குளிர்பொருநைக் காந்திமதியே!

16



சொன்னதைச் சொன்னதைச்
சொன்னதைச் சொல்லியே
சொல்லாமல் விட்டதததிகம்
சொல்லாமல் விட்டதைச்
சொல்லிட வந்தவர்
சோதனை பட்டதததிகம்

நல்லதை நல்லதை
நல்லதைச் சொல்வதால்
நாடாமல் விட்டதததிகம்
நாடாமல் விட்டதைச்
சொல்லிட வந்தவர்
நாட்டிலே பெற்றதததிகம்

உன்னையே உன்னையே
உன்னையே நம்பியே
உயிர்தாங்கும் மனித உருவின்
உயிர் வாழ்க்கை உயர்வுறவும்
உலகமே பயனுறவும்
உருவாக்கு காந்திமதியே!



17

தெளிவாக மரணமும்
உண்டென்று தெரிந்தபின்
தினந்தோறும் ஆசையென்ன
தேராத ஆசையால்
ஓராயி ரம்கவலை
தினம்தினம் வளர்ப்பதென்ன

ஒளிவீசும் வழிகளை
முன்னோர்கள் காட்டியும்
ஓராத நிலைமையென்ன
ஓரா திருந்ததும்
பாரா திருந்ததும்
உன்னாலே என்பதென்ன

கனிவான மனிதர்கள்
கனவுகள் தன்னையே
நனவாக்க வேண்டும்தாயே
கனல்கொண்ட கையினான்
உடல்பாதி கொண்டஎம்
கண்ணான காந்திமதியே!

18



கறவாத பசுக்களுக்
குதவாத காளைகள்
காளைக ளாகியென்ன
காளைகள் இன்றியே
கன்றுகள் ஈன்றிடும்
கலப்பினப் பசுக்களென்ன

உதவாத மனிதர்தம்
இல்லங்க ளுக்குள்ளே
ஒருகோடி யிருந்துமென்ன
ஒருகோடி கொண்டவர்
மனிதரைப் போலவே
உருவத்தில் வாழ்வதென்ன

திருவோடு வாழ்ந்தும்ஒரு
திருவோடு ஏந்தியே
தெருவோடு வந்த சிவனை
திருநெல்லைப் பதியிலே
தவம் கொண்டு மணம் கண்ட
தென்பொருநைக் காந்திமதியே!



19

மாறிட மாறிட
மாறிட மாறிட
மனிதர்க்கு அச்சமில்லை
மாறிய பின்னரோ
விளக்கங்கள் சொல்லிட
மனிதர்க்கு வெட்கமில்லை

கூறிடக் கூறிடக்
கூறிடக் கூறிடக்
கொள்கைக்குப் பஞ்சமில்லை
கூறிட்ட கொள்கையில்
ஒன்றையும் வாழ்க்கையில்
கொண்டிட முயலவில்லை

நீறிட்ட சிவனவன்
நெஞ்சிட்ட அரியணை
நிரந்தரம் கொண்ட மயிலே
நிலையற்ற தலைவர்கள்
தொடர்ந்திட்ட தவறுகள்
நீக்கியருள் காந்திமதியே!

20



ஆணோடு பெண்ணிங்கு
சமம் என்று சொல்லியே
ஆரவா ரங்கள் செய்வார்
அவர்களே பெண்களின்
வெற்றியைக் கண்டபின்
அசிங்கமாய்க் கதைகள் சொல்வார்

பேணிடும் பெண்களை
நாணிடும் பெண்களாய்ப்
பேணிட முயற்சி செய்வார்
பேணிடும் ஆண்களோ
நாணுதல் இன்றியே
பெரும்பெருங் கதைகள் சொல்வார்

கானிடை ஆடிடும்
கண்ணுதற் கடவுளைக்
காப்பாற்றி வாழும் உமையே
கண்ணான பெண்களின்
அறிவையும் திறனையும்
காப்பாற்று காந்திமதியே!



21

வள்ளுவன் என்றொரு
நல்லவன் தந்தனை
வாழ்வியல் காட்டி அருள
வழிமாறிப் போனவன்
நிலைகாட்டி அருளிட
வடித்தனை இளங்கோ தன்னை

தெளிவான எளிமையில்
வழிகாட்ட அவ்வையாம்
திறமான மகளும் ஈந்தாய்
தேடியும் பாடியும்
ஆடியும் கூத்திடப்
பாரதி மகனை ஈன்றாய்

இனியேதும் அறிஞர்கள்
ஈன்றெமக் கருளிட
எண்ணங்கள் கொண்டதுண்டோ
இறையான அறிவதன்
சுடராக நின்றொளிர்
எனதன்னை காந்திமதியே!

22



ஆயுதம் ஆயுதம்
ஆயுதம் தாங்கியோர்
அன்றோடு மறைகின்றாரே
அஹிம்சையை அஹிம்சையை
அஹிம்சையைத் தந்தவர்
என்றென்றும் வாழ்கின்றாரே

காயிதம் காயிதம்
காயிதம் கொண்டவர்
கதைத்திங்கு வாழ்கின்றாரே
கருத்தின்றிப் பொறுப்பின்றிப்
புகழ்பெற்றோர் வாழ்க்கையின்
கண்ணியம் குறைக்கின்றாரே

நோயிதை நோயிதை
நோயிதைக் கொண்டவர்
நூறாக ஆடிமலைத்தார்
நொடியொன்றில் இவர்களை
நல்லவ ராக்கியே
நோய்தீர்ப்பாய் காந்திமதியே!

23

பலகீனம் கொண்டவர்
செய்திடும் உதவிகள்
பாராட்டை எதிர் நோக்குமே
பாராட்ட மனமில்லா
மனிதருக் குதவிகள்
பலசெய்தார் மனம் நோகுமே

நலமீனும் செயல்களைச்
செய்திடப் பிறந்தவர்
நாடுவ தில்லை புகழே
நான் செய்தேன் நான் செய்தேன்
என்றிங்கு அலைபவர்
நாட்டினில் தலைவரெனவே

உலகென்னும் மேடையில்
ஆடிட வந்தவர்
உனைமறந் தாடலென்ன
உண்மையாய் ஒளிர்ந்திடும்
சிவனவன் பாகமாய்
உலகெங்கும் வீசும் ஒளியே!

24



நறுமணம் கொண்டதாய்
ஒரு கோடி மலர்களை
நங்கைநீ தந்திருந்தும்
நலமற்ற மலர்களை
அவைதரும் விஷங்களை
நாள்தோறும் அருந்துகின்றோம்

அறுசுவை தன்னையே
மருந்துடன் உணவுமாய்
ஆக்கியே தளதனை நீ
அகப்பட்ட அனைத்தையும்
சுடச்சுட வறுத்தெங்கள்
அனல்வயி றெரியவைத்தோம்

குறுகுறு நடைபயில்
இளமகன் முருகனைக்
கொஞ்சியே மகிழும் நேரம்
குட்டினை எங்களின்
தலையிலும் அருளிடக்
குமரனுக் குணர்த்துதாயே

25



உணர்வுகள் கலந்திட
வழியிலா உறவினில்
உடல்களை மட்டும் இணைக்க
ஊராரின் பார்வையில்
உணர்வுகள் மறைத்தந்த
உடல்களும் ஒன்று சேர

நினைவுகள் உலர்ந்திட
விழிகளும் நனைந்திட
நிம்மதி யின்றிவாழ
நீராகக் கானலை
எண்ணியே வாழ்ந்திவர்
நிதம்படும் பாடுகண்டும்

தெளிவுகள் கொண்டதோர்
அறிவான சிவமதைத்
தேடியே அணைந்து நின்றாய்
திருநெல்லைப் பதியினில்
அருள்கின்ற அன்னையே
தென்பொருநைக் காந்திமதியே!

26



சிறியவர் செய்திடும்
அறியாத செயல்களில்
சீற்றங்கள் கொள்ளும் மனிதர்
சிந்தனைத் திறனையும்
மீறியே தவறுகள்
செய்கின்ற கோலமென்ன

வறியவர் பசியினால்
செய்கின்ற பிழைகளில்
வானளவு குதிக்கும் அரசு
வளமானோர் திருடிடச்
சட்டத்தைத் துணையாக்கி
வாழ்ந்திடும் அழகு என்ன

அறியாமல் சிவனாரும்
தந்திட்ட வரங்களில்
ஆடிடும் அரக்கர் குலத்தை
அடியோடு அழித்திட்ட
காளியே காந்திமதி
அன்னையே விரைந்து வருக!



27

மலை வளம் தந்தொரு
மழை வளம் தந்தனை
மனிதரைக் காப்பதற்காய்
மலை வளம் திருடியே
மழை வளம் தடுத்தனர்
மனமிலார் வாழ்வதற்காய்

கலை வளம் தந்தொரு
மன வளம் காத்திடக்
கருணையே அருள் புரிந்தாய்
கலைவள வழியிலோ
மனவளம் அழித்திடக்
கருத்திலார் பயின்று வென்றார்

இனவளம் மதவளம்
மொழிவளம் என்றிவர்
இல்லாத வளங்கள் கண்டார்
இவருளம் நனிவளம்
கொண்டிடக் கருணைசெய்
எமதன்னை காந்திமதியே!

28



கள்ளிப்பால் தந்திங்கு
குழந்தைகள் கொல்லுறார்
காட்டுப் புறத்தார் என்பார்
சுகனத்தை ஆய்ந்திடும்
விஞ்ஞான வழியிலே
கருவினைக் கலைத்து நிற்பார்

அள்ளிப்பால் தந்திங்கு
குழந்தையைப் பேணிடும்
ஆசையை வறுமை கொல்ல
அடிமையாய் இன்னொரு
வயல்வெளிப் பெண்ணினை
ஆக்கிட வருந்திக் கொல்வார்

துள்ளிடும் வேலவர்
தும்பிக்கை நாயகர்
தூயநல் ஆண்களிருவர்
துடியிடை பெற்றது
இதுவெலாம் கருதியோ
தூயசம் பந்தன் தாயே!



29

உயர்வான எண்ணங்கள்
வழிநூறு காட்டிட
உதவுக எந்தன் அம்மா!
உள்ளார்ந்த அன்புடன்
நண்பர்கள் சிலபேர்கள்
உறவாக அருள்க அம்மா!

அயர்வான உடல்நிலை
ஒருபோதும் இல்லாத
ஆண்மையை அருள்க அம்மா!
அன்பான நல்லவர்
வெற்றிக்குத் துணை செய்ய
அருளுக பலமும் அம்மா!

மண் வாழ்க்கை முடிகையில்
மணமாக வாழ்ந்ததாய்
மனங்களில் வாழ வைப்பாய்!
மனமொழி மெய்களில்
நிறைந்திட்ட சிவனவன்
மணமான காந்திமதியே!

30



தீமைகள் செய்திட்ட
உயிர்களின் மீதும்செந்
தேன்மழை பொழியும் அன்பைத்
திருடியே வாழ்ந்திட்ட
நண்பர்கள் மீதும்நல்
தெளிவான பாசக்கூட்டை

ஊமையாய் மனம் கொண்ட
துன்பங்கள் தன்னையும்
உரைக்காத பெரிய வாழ்வை
ஒருபோதும் தீமைகள்
எவருக்கும் இழைத்திடா
உயிர்கொண்ட நல்லவாழ்வை

நான்எனும் உணர்வினைச்
சுத்தமாய் அறுத்தெனை
நலமாக்கி அருள வேண்டும்
நாயகன் செம்மேனி
தானருள் பாதியால்
நலமருள் காந்திமதியே!



31

வெற்றிகள் அனைத்திற்கும்
அடிப்படை அன்பென
விளங்கிட அருள்க அம்மா!
வினைகளால் விளைந்திடும்
துன்பங்கள் நீக்கிட
விவரங்கள் அருள்க அம்மா!

கற்றிட வேண்டிய
நல்லவை அனைத்தையும்
கற்றிட அருள்க அம்மா!
கவலைகள் என்பதை
அனுபவப் பாடமாய்க்
கணக்கினில் அருள்க அம்மா!

முற்றிய உடலிதை
விட்டுநான் பிரிகையில்
முத்தமி ழாக்கி அருள்க!
முடிதனில் கங்கையைக்
கொண்டவன் பாகமாய்
முறையான காந்திமதியே!

வடிவுடைக் காந்திமதியே...

நெல்லை கண்ணன்

கவியரசர் கண்ணதாசனுக்குப் பின்பு சந்தம் இனிக்க, மரபில் மயக்கம் தருகின்றாற்போல் எழுதுவதற்கு நிகழ்காலத் தமிழரிடையே இன்னொருவர் இல்லை என்ற என் திடமான முடிவை உங்கள் நூல் மாற்ற முயன்றது மறுக்க முடியாத உண்மை...

கல்லறைக்குள் கண்மூடித் துயிலும் கவியரசர் கண்ணதாசன் வடிவுடைக் காந்திமதியைப் பாட மீண்டும் நெல்லை கண்ணனில் உயிர்த்திருக்கிறார்.

தமிழருவி மணியன்